*கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.*

*ஏசாயா 58 :11*

**தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்**

# புனே சேகரம்

*மார்ச்* - 2021 *செய்தி மலர்* - 5

# பெதஸ்தா C.S.I. ஆலயம்



**கிறிஸ்துவுக்குள் பிரியமானவவர்களே,**

மரணத்திறகும் பாதாளத்துக்கு முரிய திறவுகோல்களை உடையவராய் இருக்கிற இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2021 ஆம் ஆண்டிலும் கடந்த இரண்டு மாதமும் வழிநடத்தி இந்த மூன்றாவது மாதமாகிய மார்ச் மாதத்தை காணவும், லெந்து நாட்களுக்குள் பிரவேசிக்கவும் செய்த ஆண்டவரை போற்றி துதிப்போம்.

"கர்த்தர்நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப் பாய்." ஏசாயா 58:11.

இந்த மார்ச் மாதத்திலும் தம்முடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் கொடுக்கிற வாக்குத் தத்தமாகும்.நாம் மிக கொடிய காலத்திற்குள்ளாக காணப்படுகிறோம். சென்ற ஆண்டு இதே மார்ச் மாதத்தில் தான்கொரானா வைரஸ் பரவுகிறது என்று சொல்லி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த நாளிலிருந்து இன்று வரை சுமார் ஒரு வருட காலம் ஆகியும் இன்னும் பூரண வாழ்க்கைக்குள்ளாக வரவில்லை. விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கிறது. அனேகருக்கு வேலைவாய்ப்பு இல்லை. இச்சூழலில்தான் தேவ பிள்ளையே, திடன் கொள். இப்படிப்பட்ட காலத்திலும் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்குவேன் என்று கர்த்தர் வாக்கு பண்ணுகிறார்.

"நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல உன் ஆத்துமா திருப்தியாகும். (சங்கீதம் 63:5) அதேபோன்று வற்றாத நீரூற்றை போல செழிப்பான வாழ்வைத் தந்து ஆசீர்வதிப்பார். இந்த ஆசிர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதை தியானிப்போம்.

**1. உபவாச ஜெபம் பண்ணுதல் (Fasting prayer) ஏசாயா 58:3-5**

கடந்த காலங்களில் ஏற்பட்ட துக்கங்களின் மிகுதியினால் நம் வாய் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்திருக்கலாம். நம் உதடுகளால் நன்றி சொல்ல முடியாமல் போயிருக்கலாம்.நம் தூக்கத்தையே பேசிக் கொண்டிருக்கலாம்.கர்த்தர், உன் ஆத்துமாவைத் திருப்தியாக்குவேன் என்று சொல்கிறார். இந்த ஆசீர்வாதத்தை நாம் சுதந்தரித்துக் கொள்வதற்கு செய்ய வேண்டிய காரியம் உபவாசித்து ஜெபிக்க வேண்டும் என்று கூறுகிறார்.நாமும் உபவாசித்து ஜெபிக்கும் போது, எக்காளத்தை

போன்று சத்தத்தை உயர்த்தி, பாடல் பாடி துதித்து மகிமைப்படுத்த வேண்டும்.நம்மை அர்ப்பணித்து, நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து விட்டு விட வேண்டும். ஆண்டவருடைய உன்னதப்பெலனை பெற்றுக்கொண்டு, கிருபை வரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.

உப வாசிக்கும் நாளிலே நம்முடைய இச்சையின் படி நடக்கக் கூடாது.நம்முடைய வேலைகளை எல்லாம் கட்டாயமாய் செய்யக்கூடாது (ஏசாயா 58:3). மற்ற மனுஷர்கள் காண வேண்டும் என்றுசொல்லி முகவாடலாய் இருக்கக்கூடாது (மத்தேயு 6:16).

இந்நாட்களில் தேவ சமூகத்தில் அமர்ந்திருந்து ஜெபிக்க வேண்டும்.தேசத்துக்காக, குடும்பத்துக்காக, சபைக்காக அழிந்து போகிற ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கும்போது ஆண்டவர் நமக்கு ஆசீர்வாதங்களை தந்துவழிநடத்துவார். நாம் உப வாசிக்கிறோம் என்று சொல்லி இந்நாட்களில் அதிகமான வேலையே நாமே இழுத்து போட்டு செய்து, ஒரு மணிநேரம் கூட ஜெபிக்காமல் இருப்போமானால், நாம் அந்நாளில் பட்டினி உபவாசம் இருக்கிறோம் என்று பொருள். ஆதலால் தேவ சமூகத்தில் ஜெபிக்கிறவர்களாக காணப்படவேண்டும்.

**2. உதவி செய்தல் (Helping) ஏசாயா 58:6,7**

தேவ சமூகத்தில் காத்திருந்து உபவாசித்து ஜெபிக்கும்போது நேரங்களும், நாட்களும் அதிகமாக அதிகமாக நம்முடைய குணாதிசயங்களில் மாற்றம் உண்டாகும்.அப்படி மாற்றம் உண்டாகவில்லை என்றால்,நாம் இன்னும் ஒழுங்காக அர்ப்பணித்து ஜெபிக்க வில்லை என்று அர்த்தம்.நம்மை அர்ப்பணித்து ஜெபிக்கும்போது நம்முடைய பழைய குணாதிசயங்கள் மாறி புதிய குணாதிசயங்கள் உருவாகும்.அப்படி உருவாகிற குணாதிசயம் தான் உதவி செய்த குணாதிசயம்.நெருக்கப்பட்டு காணப்படுகிறவர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்கிறதும்,நுகத்தடிகளை உடைத்துபோடுகிறதும்,பசி உள்ளவனுக்கு நம் ஆகாரத்தை கொடுக்கிறதும், துரத் துண்ட சிறுமையானவர்களுக்கு தம் வீட்டிலே சேர்த்து உதவி செய்கிறதும், வஸ்திரம் இல்லாதவர்களுக்கு வஸ்திரம் கொடுப்பதும், நம் உறவினர்களுக்கு நம்மை ஒளிக்காமல் இருப்பதுதான் நமக்கு உகந்த உபவாசம் என்று கர்த்தர் கூறுகிறார்.

ஆதலால் உபவாசம் இருக்கும்போது மட்டுமல்ல எந்நாளிலுமே மற்றவர்களுக்கு உதவி செய்பவர்களாக நாம் காணப்படவேண்டும். உதவி

செய்கிறவர்களாக காணப்படும் போதுஉன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும் என்று கர்த்தர் கூறுகிறார்.

### 3. ஆராதனை செய்தல் (Worship) ஏசாயா 58:13,14

நாம் உபவாசித்து ஜெபிக்க அது மாத்திரமல்ல, கர்த்தருடைய ஆலய ஆராதனைகளிலும் பங்குகொள்ள வேண்டும். ஓய்வு நாளில் நமக்குஇஷ்டமானதை செய்யக்கூடாது. அதற்கு நம்முடைய காலை விலக்க வேண்டும். நம் சொந்த வழியில் நடக்க கூடாது. நமக்கு இஷ்டமானதை செய்யக்கூடாது. நம் சொந்த பேச்சைக்கூட பேசக்கூடாது. இந்த நாளை நம்முடைய மன மகிழ்ச்சி நாள் என்றும், மகிமையுள்ள நாள் என்று சொல்லி மகிமையாக எண்ண வேண்டும். இப்படி நாம் எண்ணி ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க என்னும் போதும், அதற்கு முதலிடம் கொடுக்கும் போதும் கத்தரில் மனமகிழ்ச்சியாய் இருக்க முடியும். பூமியின் உயர்ந்த இடங்களில் ஏறி இருக்கும்படி நம்மை உயர்த்துவார். நம் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்திரத்தால் நம்மை போஷித்து நித்தமும் நம்மை வழிநடத்தி, வறட்சியான காலங்களிலும் நம் ஆத்துமாவை திருப்தியாக்கி, செழிப்பான வாழ்வை தந்து ஆசீர்வதிப்பார்.

ஆதலால் அருமையானவர்களே! கர்த்தர் இந்த மார்ச் மாதத்திலும் நம்மை நித்தமும் நடத்த வாக்கு பண்ணியிருக்கிறார்.நாமும் உபவாசித்து நாம் இருக்கிற தேசத்துக்கா கவும், தேசத்தில் இருக்கிற ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கவும்,நம்முடைய குணாதிசயங்களில் மாற்றமடைந்து மற்றவர்களுக்கு உதவி செய்யவும், கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து ஞாயிறு ஆராதனையில் பங்கு பெறவும் இந்த மாதத்தில் தீர்மானம் எடுத்து ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

Dear beloved in Christ,

Greetings to you in the name of our Lord Jesus Christ who holds the keys to death and Hades. By God's abundant grace He has led us these past two months in 2021 and helped us to enter into this third month of March and also in to the season of Lent. So, let us praise and adore Him.

"The Lord will guide you always; he will satisfy your needs in a sun-scorched land will strengthen your frame. You will be like a well-watered garden, like a spring whose waters never fail." - Isaiah 58:11

This is the promise verse which God has given to His children in this month of March. We are living in perilous times. Last year, in this same month of March, owing to the spread of coronavirus, lockdown was declared. From that day on till now, even though almost a whole year has passed we have not yet returned to complete normalcy. The prices of goods and commodities are going up. Many are without jobs. Even in this situation, child of God, take heart. Even in these times, God has promised to satisfy your soul.

"I will be fully satisfied as with the richest of foods; with singing lips my mouth will praise you." – Psalm 63:5

Similarly, like a spring whose waters never fail God will give a blessed life. Let us meditate on what we must do to receive these blessings.

1. Fast and pray (Isaiah 58:3-5)

Our mouths might have murmured against God due to the overwhelming distress seen in the past year. We might have not been able to thank Him with our lips. We might have kept talking only about sorrow filled stories in our lives. God says, He will satisfy your soul. To inherit this promise we need to fast and pray. When we fast and pray, we need to raise our voices like a trumpet sound and sing songs and glorify God. We need to commit ourselves to God, confess our sins and forsake them. After receiving God's power from on high we need to pray intentionally to receive God's gifts of grace. In the days of fasting we should not walk according to the flesh and exploit our workers (Isaiah 58:3). We should not fast to be noticed by other men (Matthew 6:16). In the days of fasting we need to sit in God's presence and pray. When we pray for the nation, church and the perishing souls, God will bless us and lead us. In the name of fasting if we take up a heavy

workload and do not spend even an hour in prayer then what we have done is only starve. Therefore, let us be found as prayerful people in God's presence.

2. Help others (Isaiah 58:6,7)

When we wait and pray in God's presence, times and seasons will increasingly change our character. If there is no change still, it means we have not yet properly yielded ourselves to prayer. When we commit ourselves and pray, our old nature should change and we will be transformed in to the new nature. One such new nature is to help others. Isaiah 58:7, "to loose the chains of injustice and untie the cords of the yoke, to set the oppressed free and break every yoke?", that is the kind of fasting which God says he has chosen. Therefore, not only during the time of fasting but we need to be seen as helping people all our lives, then your life will blossom and you will be righteous, says the Lord.

3.Worship God (Isaiah 58:13,14)

We should not only fast and pray in person but we need to participate in the worship services of the church. We should not do our own things on the Sabbath day. We need to restrain our feet for this. We should not walk in our own ways. We should not do things that please us. We should not even talk about ourselves. We should consider this day as a day of delight and a glorious day. When we do this and keep the Sabbath day holy, we will be able to delight ourselves in the Lord. The Lord will cause us to rise to the heights of the land. The Lord will give us the inheritance of Jacob and lead us, even in times of famine the Lord will satisfy us and bless us and keep us.

Therefore, beloved in Christ, The Lord has promised to lead us in this month of March and also un to eternity. So, let us and fast and pray for our nation, for the souls in the nation. Let our lives be transformed in to people who would be helping others, participating in Sunday worship services by giving God the first place in our lives. Let us take a decision to follow these in this month and be blessed. May God bless you!

# திருவசன ஊழியம்

## MEMORY VERSES 2021

**07-03-2021**

### இடைவிடாத ஜெபம்

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.

- 1 தெசலோனிகேயர் 5:16,17

**07-03-2021**

### Pray without Ceasing

Rejoice always, pray without ceasing,

- I Thessalonians 5:16,17

**14-03-2021**

### ஆராதிப்போம் வாருங்கள்

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது

- மத்தேயு 15:8

**14-03-2021**

### Come let us worship

This people honors me with their lips, but their hearts are far from me;

- Matthew 15:8

**21-03-2021**

### சிலுவை

அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். - மத்தேயு 16:24

**21-03-2021**

### Cross

Then Jesus told his disciples, "If any want to become my followers, let them deny themselves and take up their cross and follow me.

- Matthew 16:24

**28-03-2021**

### ஓசன்னா பாடுவோம்

கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

- சங்கீதம் 118:26

**28-03-2021**

### Sing Hosanna

Blessed is the one who comes in the name of the Lord. We bless you from the house of the LORD - Psalm 118:26

# அனுதின வேத வாசிப்பு பகுதி

| மார்ச் | | | | |
|---|---|---|---|---|
| தேதி | காலை | காலை | மாலை | மாலை |
| 1 | லேவி 24:1-25 | நீதி 10:20-21 | மாற் 10:13-31 | சங் 44:8-26 |
| 2 | லேவி 25:47-27:13 | நீதி 10:22 | மாற் 10:32-52 | சங் 45:1-17 |
| 3 | லேவி 27:14 - எண் 1:54 | நீதி 10:23 | மாற் 11:1-25 | சங் 46:1-11 |
| 4 | எண் 2:1 – 3:51 | நீதி 10:24-25 | மாற்11:26 – 12:17 | சங் 47:1-9 |
| 5 | எண் 4:1 – 5:31 | நீதி 10:26 | மாற் 12:18-37 | சங் 48:1-14 |
| 6 | எண் 6:1 – 7:89 | நீதி 10:27-28 | மாற் 12:38 – 13:13 | சங் 49:1-20 |
| 7 | எண் 8:1 – 9:23 | நீதி 10:29-30 | மாற் 13:14-37 | சங் 50:1-23 |
| 8 | எண் 10:1 – 11:23 | நீதி 10:31-32 | மாற் 14:1-21 | சங் 51:1-19 |
| 9 | எண் 11:24 – 13:33 | நீதி 11:1-3 | மாற் 14:22-52 | சங் 52:1-9 |
| 10 | எண் 14:1 – 15:16 | நீதி 11:4 | மாற் 14:53-72 | சங் 53:1-6 |
| 11 | எண் 15:17 – 16:40 | நீதி 11:5-6 | மாற் 15:1-47 | சங் 54:1-7 |
| 12 | எண் 16:41 – 18:32 | நீதி 11:7 | மாற் 16-1-20 | சங் 55:1-23 |
| 13 | எண் 19:1 – 20:29 | நீதி 11:8 | லூக் 1:1-25 | சங் 56:1-13 |
| 14 | எண் 21:1 – 22:20 | நீதி 11:9-11 | லூக் 1:25-56 | சங் 57:1-11 |
| 15 | எண் 22:21 – 23:30 | நீதி 11:12-13 | லூக் 1:57-80 | சங் 58:1-11 |
| 16 | எண் 24:1 – 25:18 | நீதி 11:14 | லூக் 2:1-35 | சங் 59:1-17 |
| 17 | எண் 26:1 – 51 | நீதி 11:15 | லூக் 2:36-52 | சங் 60:1-12 |
| 18 | எண் 26:52 – 28:14 | நீதி 11:16-17 | லூக் 3:1-22 | சங் 61:1-8 |
| 19 | எண் 28:15 – 29:40 | நீதி 11:18-19 | லூக் 3:23-38 | சங் 62:1-12 |
| 20 | எண் 30:1 – 31:54 | நீதி 11:20-21 | லூக் 4:1-30 | சங் 63:1-11 |
| 21 | எண் 32:1 – 33:39 | நீதி 11:22 | லூக் 4:31-5:11 | சங் 64:1-10 |
| 22 | எண் 33:40 – 35:34 | நீதி 11:23 | லூக் 5:12-28 | சங் 65:1-13 |
| 23 | எண் 36:1 – உபா 1:46 | நீதி 11:24-26 | லூக் 5:29 – 6:11 | சங் 66:1-20 |
| 24 | உபா 2:1 – 3:29 | நீதி 11:27 | லூக் 6:12-38 | சங் 67:1-7 |
| 25 | உபா 4:1 – 49 | நீதி 11:28 | லூக் 6:39 – 7:10 | சங் 68:1-18 |
| 26 | உபா 5:1 – 6:25 | நீதி 11:29-31 | லூக் 7:11-35 | சங் 68:19-35 |
| 27 | உபா 7:1 – 8:20 | நீதி 12:1 | லூக் 7:36 – 8:3 | சங் 69:1-14 |
| 28 | உபா 9:1 – 10:22 | நீதி 12:2-3 | லூக் 8:4-21 | சங் 69:15-36 |
| 29 | உபா 11:1 – 12:32 | நீதி 12:4 | லூக் 8:22-40 | சங் 70:1-5 |
| 30 | உபா 13:1 – 15:23 | நீதி 12:5-7 | லூக் 8:41 – 9:6 | சங் 71:1-24 |
| 31 | உபா 16:1 – 17:20 | நீதி 12:8-9 | லூக் 9:7-27 | சங் 72:1-20 |

# மாற்கு – விடைகள்

1. மாற்கு 3:17
2. மாற்கு 5:9
3. மாற்கு 15:22
4. மாற்கு 10:46
5. மாற்கு 7:11
6. ஏரோதியர்கள் - மாற்கு 3:6
7. நாலாம் ஜாமம் - மாற்கு 6:48
8. 1 முறை - மாற்கு 12:18
9. ஒரு துட்டுக்கு சரியான 2 காசை - மாற்கு 12:43
10. மாற்கு 4:24
11. தூங்கி கொண்டு இருந்தார் - மாற்கு 4:38
12. சீரோபேனிக்கியா மாற்கு 7:26
13. ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார் - மாற்கு 14:38
14. சேவல், பேதுரு - மாற்கு 14:72
15. மாற்கு 16:17,18

## பிப்ரவரி மாதம் வேதாகம கேள்விகளுக்கு சரியான விடைகள் எழுதினவர்கள்

1. Mr. Bestlin
2. Mrs. Deepa
3. Mrs. Prema Samson
4. Mrs. Jennifer
5. Mrs. Dharshana
6. Mrs. Jasmine Edwin




## BIRTHDAYS




3 March - Mrs. Aarthy Dharshana Lipton

22 March - Baby. Keren Joan Stephen

## *பிறந்த நாளுக்கான வாக்குத்தத்தம்:*

**நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

*ஏசாயா 41:10*

**Fear thou not; for I am with thee: be not dismayed; for I am thy God: I will strengthen thee; yea, I will help thee; yea, I will uphold thee with the right hand of my righteousness.**

*Isaiah 41:10*

## மார்ச் மாத நிகழ்வுகள்

| தேதி | நேரம் | ஆராதனை |
|---|---|---|
| 1.03.2021 Monday | 7:30 PM | வாக்குத்தத்த ஸ்தோத்திர திருவிருந்து ஆராதனை |
| 5.03.2021 Friday | 7:30 PM | Third Lent Friday |
| 7.03.2021 Sunday | 8:00 AM | திருவிருந்து ஆராதனை |
| 12.03.2021 Friday | 7:30 PM | Fourth Lent Friday |
| 14.03.2021 Sunday | 8:00 AM | ஞாயிறு ஆராதனை |
| 19.03.2021 Friday | 7:30 PM | Fifth Lent Friday |
| 20.03.2021 Saturday | 9:30 AM | உபவாச ஜெபம் |
| 21.03.2021 Sunday | 8:00 AM | திருவிருந்து ஆராதனை |
| | 11:30 AM | திரு. A.E. Stephen அவர்கள் இல்ல ஜெபக் கூட்டம் |
| 26.03.2021 Friday | 7:30 PM | Sixth Lent Friday |
| 27.03.2021 Saturday | 7:00 PM | Covention<br>செய்தி - Mr. David Vijayakanth |
| 28.03.2021 Sunday | 8:00 AM | குருத்தோலை ஞாயிறு<br>செய்தி - Mr. David Vijayakanth |

# Good Friday Service

| S. No. | வார்த்தைகள் | தலைப்புகள் | செய்தியாளர் |
|---|---|---|---|
| 1 | முதலாம் | பரிந்து பேசும் இயேசு<br>லூக்கா 23:24 | Mrs. Jasmine Edwin |
| 2 | இரண்டாம் | புது ஜீவன் அளிக்கும் இயேசு<br>லூக்கா 23:43 | Mrs. Dharshana Kishan |
| 3 | மூன்றாம் | புது வாழ்வு அளிக்கும் இயேசு<br>யோவான் 19:26,27 | Mr. S. Phinehas |
| 4 | நான்காம் | சாத்தானின் தலையை நசுக்கிய இயேசு<br>மத்தேயு 27:45,46 | Mr. V. Mathavan |
| 5 | ஐந்தாம் | தாகமாயிருக்கிற இயேசு<br>யோவான் 19:28 | Mr. L. Jerome Appadurai |
| 6 | ஆறாம் | முடிந்தது என்றார் இயேசு<br>யோவான் 19:30 | Mr. V. Blessing Easter Raj |
| 7 | ஏழாம் | ஆவியை ஒப்படைத்த இயேசு<br>லூக்கா 23:46 | Mrs. Merryl Stephen |

**உங்களுக்காக ஜெபிக்கும்**

**Rev. S. சௌந்திரபாண்டியன்**

**சேகர குரு**

**புனே சேகரம்**